

பிட்டுக்கு மண் சுமந்த படலம்




ஆக்கம் - ஜெகதீஸ்வரன் நடராஜன்


மதுரையில் கடுமையான மழை. வைகை ஆறு கரையை உடைத்து ஓடத்தொடங்கியது
மந்திரிகளே! வீட்டிற்கு ஒருவரென உடனடியாக வைகை ஆற்றின் கரையை அடைக்க உத்தரவிடுங்கள்!
பிட்டு
வந்திபாட்டி மட்டும் தன்னால் இப்பணியை செய்ய முடியவில்லையே என வருந்தினார்


ஈசனே! எம்பிரானே! எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையே! நான் என்ன செய்வேன்?
அப்போது வந்திப்பாட்டியின் பக்திக்கு உருகி, சிவபெருமான் ஒரு கூலி ஆளாக அங்கு வந்தார்.
பாட்டி! நீங்க இந்த பிட்டு உடைஞ்சத தாருங்க. நான் உங்க கூலிக்கு மண் சுமந்து கரை அடைக்கிறேன்!
யார் இந்த இளைஞன்? என் கூலிக்கு மண் சுமக்க ஒப்புக்கொண்டானே


அனைவரும் கரையை அடைக்க பாடுபட,
வந்தியின் கூலியாளோ பிட்டை திருப்தியாகச்
சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.
ஏய் சொம்பேறியே! எல்லாரும் வேலை செய்யும்போது நீ மட்டும் என்ன உறங்குகிறாய்?


வைகை கரையை பார்வையிட வந்த. மன்னன், அந்திப்பாட்டியின் பகுதி மட்டும் அடைக்கப்படாமல் இருப்பதை கண்டு சினமுற்றான்.
வேலை செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்த சிறுவனை பிரம்பால் அடித்தார் மன்னன்
அதிசயமே! இவனை அடித்த அடி உலகத்துக்கே வலிக்கிறதே! இவன் சாதாரண மனிதனா, இல்லை.. இறைவனோ?


அதிசயமாக வைகை ஆற்றின் கரையும் தானாகவே அடைபட்டது. வானில் சிவபெருமான் தன் நிஜ ரூபத்தில் காட்சியளித்தார்.
வந்தியின் பக்திக்கு மெச்சியே நாம் கூலியாக வந்தோம்! தூய பக்தியே எங்களை அடையும் வழி

எழுத்தாளர்:



காட்டுப்புத்தூரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் நடராஜன், தமிழகத்தின் கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை டிஜிட்டல் தளங்கள் மூலம் ஆவணப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

விக்கிப்பீடியா மற்றும் 'Free Tamil Ebooks' ஆகியவற்றில் பங்களிப்பாளரான இவர், தமிழ் இலக்கியத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தானெடுத்த புகைப்படங்கள் மற்றும் படைப்புகளைப் பகிர்ந்து வருகிறார்.

ஆன்மீகம் மற்றும் வரலாற்றுத் தேடலால் ஈர்க்கப்பட்ட இவரது நோக்கம், தமிழ் பாரம்பரியத்தின் ஆழமான மரபுகளை இளைய தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதாகும்.

ஆளுடைய அடியார்கள் திருக்கூட்டம், முசிறி